நகராட்சி அலுவலகம்,
சாத்தூர்.
நாள்: 18.07.2022
---------------------------

## சாத்தூர் நகர்மன்றம் சாதாரணக் கூட்டம் அறிவிப்பு

**கூட்டம் எண். 3**

**நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053ம் வருடம் ஆடி 06 ஆம் நாள் 2022ம் ஆண்டு ஜூலை மாதம் 22.07.2022ம் தேதியன்று வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**நகர்மன்றத் தலைவர்**
**சாத்தூர் நகராட்சி.**

**பொருள் எண்: 1**

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.A7/19119/2021, நாள்: **09.08.2021**ம் தேதிய கடிதத்தில் **2021–2022**ம் ஆண்டிற்கான பணியிடம் வாரியாக தினசரிபடி நிர்ணயம் செய்து வரப்பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண். 862/2017/அ1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 53, நாள்: 22.07.2022**
**தீர்மானம் : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்: 2**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண்.**1588/2015/ஜே1, 15.06.2015**ம் தேதிய நேர்முகக் கடிதத்தில் **10.06.2015**ல் நடைபெற்ற பருவமழை முன்னேற்பாடு, கொசு மூலம் பரவும் நோய்கள் மற்றும் தொற்று நோய் தடுப்புப்பணிகள் மற்றும் தூய்மைபணி சம்மந்தமான ஆய்வுக்கூட்ட நடவடிக்கை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பப்பட்ட வாட்ஸ் அப் செய்தியிலும், அரசாணை (நிலை) எண்.**101** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.**3**) துறை நாள்:**30.04.1997**ல் அளவுகோலின்படி (Norms) தேவைப்படும் தூய்மை பணியாளர்களை (Outsourcing) தினக்கூலி அடிப்படையில் அனுமதி பெற்று நியமித்துக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சாத்தூர் நகராட்சியில் 2011ம் வருடத்திய கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 29390 மற்றும் குடியிருப்புகளின் எண்ணிக்கை 8104 உள்ளது. இந்நகராட்சியில் பேருந்து நிலையம், தினசரி காய்கறி மார்க்கெட் மற்றும் குடியிருப்புகளில் இருந்து தினசரி 10.4 மெட்ரிக்டன் திடக்கழிவுகள் உண்டாகிறது. மேலும் நகராட்சி சாலைகள் 37கி.மீ., மாநில நெடுஞ்சாலை 2.11கி.மீ., தேசிய நெடுஞ்சாலை 2கி.மீ. மற்றும் நகராட்சி கழிவுநீர், மழைநீர் வடிகால் 30.5கி.மீ. நீளம் உள்ளது. இவை தவிர மழைநீர் செல்லும் ஓடைகள் தேசிய மற்றும் மாநில மழைநீர் செல்லும் வடிகால்கள் உள்ளது. நகராட்சிக்கு உரக்கிடங்கு ஒன்றும் உள்ளது. மேற்கண்டவற்றில் ஏற்படும் பணிகளை தற்போதுள்ள நகராட்சி தூய்மைப் பணியாளர்களால் செய்ய இயலாத நிலை உள்ளது. இதனால் பொது சுகாதாரப்பணிகள் மற்றும் டெங்கு தடுப்பு பணிகளில் சுணக்கம் ஏற்படுகிறது.

இந்நகராட்சியில் 1970ம் வருடத்தில் 81 தூய்மைப் பணியாளர்களின் பணியிடங்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது. 45 வருடங்களாக கூடுதல் தூய்மைப் பணியாளர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படவில்லை. மக்கள் தொகை பெருக்கம் மற்றும் பொதுமக்களின் அன்றாட தேவைகளின் காரணமாக திடக்கழிவுகளின் அளவு பெருகியுள்ளது. இந்நகரில் 10.4 மெட்ரிக்டன் திடக்கழிவுகள் உண்டாகிறது. எனவே அவற்றிற்கேற்றாற்போல் தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை நாள்:30.04.1997–ல் அரசு நிர்ணயித்துள்ள (Norms) அளவுகோலின்படி கீழ்க்கண்டவாறு இந்நகராட்சிக்கு தற்போது 117 தூய்மைப் பணியாளர்கள் தேவைப்படுகிறது

**அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை நாள்: 30.04.1997–ன்படி சாத்தூர் நகராட்சி பொது சுகாதாரப்பணி – தூய்மை பணியாளர் பணியிடங்கள் தோற்றுவித்தல் – அளவுகோல் – திருத்தியமைத்தல் – விபரம்**

| வ.எண் | வேலை வகைப்பாடு | தேவையான தூய்மைப் பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 250 – குடியிருப்புக்கள் அல்லது 3 கி.மீ. சாலைக்கு 3 பேர் கொண்ட குழு (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 8104 குடியிருப்புகள்) | |
| | $\frac{8104}{250}$ x 3 நபர்கள் | 97 |
| 2 | பெரிய லாரி – 1 | 4 |
| 3 | சிறிய லாரி – 2 | 6 |
| 4 | டிராக்டர் வாகனம் – 1 | 3 |

| | | |
|---|---|---|
| 5 | உரக்கிடங்கு பராமரிப்பு | 2 |
| 6 | பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம் பராமரிப்பு | 1 |
| 7 | பேருந்து நிலைய கழிவறை பராமரிப்பு | 2 |
| 8 | பேருந்து நிலைய பராமரிப்பு C பிரிவு | 2 |
| | மொத்தம் | 117 |

அனுமதிக்கப்பட்ட தூய்மைப் பணியாளர் பணியிடங்கள் – 81

காலிப்பணியிடங்கள் – 50

---------

தற்போது உள்ள தூய்மைப் பணியாளர்கள் – 31

---------

(Norms) அளவுகோல்படி நகராட்சிக்கு தேவைப்படும் தூய்மைப் பணியாளர்கள் எண்ணிக்கை. – 117

தற்போது உள்ள பணியாளர்கள் – 31

காலி பணியிடம் – 9

01.02.2018 முதல் தூய்மைப் பணியாளர்கள் தனியார் மூலம் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் – 36

01.07.2019 முதல் தூய்மைப் பணியாளர்கள் தனியார் மூலம் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் – 41

---------

தற்போது மொத்த தூய்மைப் பணியாளர்கள் – 117

---------

அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை நாள்:30.04.1997ல் குறிப்பிட்டுள்ளவாறு அளவுகோலின்படி (Norms) நகராட்சிக்கு தேவைப்படும் 117 தூய்மைப் பணியாளர்களில் தற்போது பணிபுரியும் 31 பணியாளர்கள் தவிர்த்து மீதமுள்ள 86 தூய்மைப் பணியாளர்களின் பணியிடங்களுக்கு (Outsourcing) தினக்கூலி அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.36909/பி3/2015, நாள்: 18.12.2015ம் தேதிய செயல்முறை ஆணையின்படி 36 தூய்மைப் பணியாளர்களுக்கு அனுமதி பெற்று தனியார் மூலம் 01.02.2018 முதல் 28.02.2021 உடன் மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி அடிப்படையில் 36 தினக்கூலி பணியாளர்கள் மூன்றாண்டுகள் பணி நிறைவடைகிறது. அதனை மீண்டும் புதுப்பித்துக் கொள்வதற்கும், மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.28369/2018/ஜே3, நாள்: 04.12.2018ன்படி 41 தூய்மை

பணியாளர் பணியிடங்களுக்கு அனுமதி பெற்று, **01.07.2019** முதல் **30.08.2020** வரை ஓராண்டு பணி நிறைவு பெற்றவுடன் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதாரப்பணிகள் பாதிக்காத வண்ணம் இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.**1582/2015**/எச்**1**, நாள்: **19.08.2021**ல் இரண்டாம் ஆண்டுக்கு முதலாம் ஆண்டிற்கு எடுக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில், தற்போது கொரோனா வைரஸ் கோவிட்–**19** நடைமுறையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டு தொடர்ந்து தூய்மை பணிகளை மேற்கொள்ள, பார்வை **6**ல் கண்ட மெஸர்ஸ் ரெலையான் பெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை ஒப்பந்ததாரர் அவர்களின் கடிதத்தில் கேட்டுக்கொண்டபடி ஒரு நாளைக்கு ஒருநபருக்கு பழைய விலை விகிதம் ரூ.**307/–**க்கு நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள **51** நிபந்தனைகளுக்குட்பட்டு மெஸர்ஸ் ரெலையான் பெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் மூலம் **01.07.2020** முதல் ஏற்கனவே செய்து வரும் பணியினை தொடர்ந்து தனியார் மூலம் தூய்மை பணி மேற்கொண்டுவர அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சி பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி அளவுகோலின்படி (Norms) தேவைப்படும் **117** தூய்மைப் பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது **31** நிரந்தர பணியாளர்கள், **36** தூய்மைப் பணியாளர்களுக்கு மூன்றாண்டுகள் தனியார் மூலம் **28.02.2021**ல் முடிவடைந்துள்ளது.

மேலும் **01.07.2019** முதல் பணிபுரிந்து வரும் **41** தூய்மைப் பணியிடங்களுக்கும், **30.06.2022**ல் முடிவடைந்துள்ளது. ஆகவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததால் மேற்படி பணியாளர்களை வைத்து பணி செய்யப்பட்டு வருகிறது. மேலும் மூன்று மாத காலத்திற்கு பணி நீடிப்பு உத்திரவு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வுபெற்றும், பணியிடை காலமாக காலமான காலிப்பணியிடங்கள்–**9** ஆக மொத்தம் சேர்த்து **86** தூய்மைப் பணியிடங்களை (Outsourcing) தினக்கூலி அடிப்படையில் **86** தூய்மை பணியாளர்களை நியமிக்க அதற்கான அனுமதி வேண்டி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும், சம்பள செலவினத் தொகையை வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1582/2015/எச்1)**
**நகர்மன்றத் தீர்மானம் எண். 54, நாள்: 22.07.2022**
**தீர்மானம் : மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 3</u>

இந்நகராட்சி பகுதியில் முதிர்ந்த கொசுக்களினால் பரவும் டெங்கு காய்ச்சல் முன்னெச்சரிக்கை தடுக்கும் பொருட்டும், தற்போது மழைக்காலம் ஆரம்பிக்கப்பட உள்ளதால், இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் போதுமான பைரைத்திரம் மற்றும் டெமிபாஸ் இருப்பு இல்லாததால் 2022–2023ம் ஆண்டிற்கு டெமிபாஸ் 50% - 60 லிட்டர் மற்றும் பைரைத்திரம் 2% 200 லிட்டர் அரசு மருத்துவ சர்வீஸ் கார்ப்பரேசன் லிமிடெட் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை விகிதத்தில் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

இந்நகராட்சி பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான செலவுத் தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 443/2022/எச்1)**
**நகர்மன்றத் தீர்மானம் எண். 55, நாள்: 22.07.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்: 4</u>

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு பைரேத்திரம் மற்றும் டெமிபாஸ் மருந்துகள் வாங்குவதற்கு 29.06.2022ம் தேதியன்று பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தினை கீழ்க்கண்ட விபரப்படி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்கள் விபரம் | எண்ணிக்கை | Connektion Pvt. Ltd., 715, Spenser Plaza Annasalai, Mount Road, Chennai. ரூ. | A to Z Enterprises, 10, S2, Balaji Nagar, 6th Street, Puzhudivakkam, Chennai. ரூ. |
|---|---|---|---|---|
| 1 | பைரேத்திரம் 2% | 200 லிட்டர் | 2,30,000 | 2,20,000 |
| 2 | டெமிபாஸ் 50% | 60 லிட்டர் | 39,000 | 37,500 |
| | மொத்தம் ரூ. | | 2,69,000 | 2,57,500 |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைவாகக் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி A to Z Enterprises, Chennai நிறுவனத்தாருக்கு விநியோக உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்.443/2022/எச்1)**
**நகர்மன்றத் தீர்மானம் எண். 56, நாள்: 22.07.2022**
**தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.**

பொருள் எண்: 5

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு 2022–2023ம் ஆண்டுக்கு தேவையான எழுது பொருட்கள், பணமதிப்புகள்ள இரசீது புத்தகம், பணமதிப்பு கணினி ரசீதுகள், பதிவேடுகள், படிவங்கள், கணினி பிரிண்டருக்கு தேவையான டோனர்கள், ரிப்பன் மற்றும் அனைத்து வகையான உதிரிபாகங்கள் அவ்வப்போது தேவைக்கேற்ப அரசு சார்ந்த கூட்டுறவு அச்சக சங்கம் மூலம் வாங்கவும், அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.8.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

அங்கீகரிக்கப்பட்ட அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி, குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரரிடமிருந்து அவ்வப்போது தேவைப்படும் போது வாங்கிக்கொள்ளவும், அதற்கு ஆகும் செலவுத் தொகை ரூ.8.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 250/2020/அ1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 57, நாள்: 22.07.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 6

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்தில் இட்லி பாய்லர் பழுதடைந்துள்ளதால், புதிய இட்லி கொப்பரை வாங்கிதரக்கோரி அன்னை சந்தியா மகளிர் சுயஉதவிக்குழு தலைவரிடம் இருந்து கடிதம் வரப்பட்டுள்ளது. அதன்படி இட்லி கொப்பரை புதிதாக வாங்க விலைப்புள்ளி கோரலாம் என்ற விபரம் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. விலைப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.
2. விலைப்புள்ளி கோரி வரப்படும் விலையில் குறைந்த விலைப்புள்ளியினை அங்கீகரித்து புதிய இட்லி கொப்பரை வாங்கவும், அதற்கான செலவினத் தொகையினை வழங்கவும், அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நடவடிக்கை மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 750/2015/எப்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 58, நாள்: 22.07.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 7

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்தில் இட்லி கொப்பரை புதிதாக வாங்குவதற்கு 01.06.2022ம் தேதி விலைப்புள்ளி அறிவிப்பு வழங்கப்பட்டது. அதன்படி இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது. அதன் விலைப்பட்டியல் கீழ் வருமாறு

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்பட்டியல் ரூ. |
|---|---|---|
| 1 | திரு. ஸ்ரீ சக்தி முருகன் பாத்திரக்கடை | 6,500 |
| 2 | திரு.P.A. பாவனாச நாடார் ஸ்டோர்ஸ் | 4,800 |

இதில் குறைவாக வரப்பட்டுள்ள வரிசை எண்.2, திரு.P.A.பாவனாச நாடார் ஸ்டோர்ஸ் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதை ஏற்று அந்த நிறுவனத்தில் இட்லி கொப்பரை விநியோக உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 750/2015/எப்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 59, நாள்: 22.07.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 8**

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட பெரியார் நகர், சர்வே வார்டு – ஏ, பிளாக் **– 1**, நகரளவு எண்.127ல் நியாய விலைக்கடை அமைக்க வட்டாட்சியர், சாத்தூர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். மேற்படி இடம் பார்வையிடப்பட்டது. நகரளவர் அவர்களின் குறிப்பின்படி மேற்படி இடமானது நகரளவை ஆவணங்களின்படி சாத்தூர் புறம்போக்கு என்றும், ஆதிதிராவிடர் நலம், விருதுநகர் என்ற பெயரில் தாக்கலாகி உள்ளது. எனவே மேற்படி இடத்தில் நியாய விலைக்கடை அமைக்க நகர்மன்றத்தின் ஒப்புதலுக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 440/2022/எப்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 60, நாள்: 22.07.2022**
**தீர்மானம் : மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 9**

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட வெள்ளக்கரை சாலை சர்வே வார்டு – சி, பிளாக் **– 8**, நகரளவு எண்.**98**ன் பகுதியில் புதிய ஆவின்பாலகம் **6’0’ x 8’0’** என்ற அளவில் மாட மாளிகை எதிர்புறம் அமைக்க அனுமதி கோரியுள்ளார்கள். மேற்படி இடம் பார்வையிடப்பட்டது. மேற்படி இடம் நகராட்சி பராமரிப்பில் உள்ள வெள்ளக்கரை சாலையின் ஒரு பகுதியாகும். மேற்படி இடத்தில் ஆவின்பாலகம் அமைப்பதால் பொதுமக்களுக்கு பயன் உள்ளதாக இருக்கும். மேற்படி இடத்தில் ஆவின்பாலகம் அமைவதால் போக்குவரத்திற்கு இடையூறு ஏதும் இல்லை. எனவே மேற்படி இடத்தில் **6’0’ x 8’0’ (1.83**m x 2.44m) என்ற அளவில் ஆவின்பாலகம் அமைக்க நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

## நிபந்தனைகள் :

1. அனுமதிக்கப்பட்ட அளவிலான 6'0' x 8'0' (1.83m x 2.44m) என்ற அளவில் மட்டும் ஆவின்பாலகம் அமைக்க வேண்டும்.
2. ஆவின்பாலகத்தில் ஆவின் பொருட்கள் மட்டும் விற்பனை செய்ய வேண்டும்.
3. அனுமதிக்கப்பட்ட அளவினை கூடுதலாக எவ்வித ஆக்கிரமிப்போ, போக்குவரத்திற்கோ இடையூறு ஏற்படுத்தக்கூடாது.
4. ஆவின்பாலகம் அமைக்க வழங்கப்பட்ட அனுமதி தற்காலிகமானது.
5. அனுமதிக்கப்பட்ட இடத்தில் நகராட்சி வளர்ச்சிக்கு தேவைப்படும் பட்சத்தில் அறிவிப்பு பெறப்பட்ட பின்பு நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டும்.
6. மேற்படி நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி வழங்கப்பட்ட அனுமதி இரத்து செய்யப்படும்.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 297/2022/எப்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 61, நாள்: 22.07.2022**
**தீர்மானம் : மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 10**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் 10383./2021/மாதி/2 நாள்27,06,202.தேதிய கடிதத்தில் எதிர்வரும் பருவமழையினை முன்னிட்டு அனைத்து மழைநீர் வடிகால்களையும்,கால்வாய்களையும் மற்றும் சிறுபாலங்களையும் துார்வாரி துாய்மைப்படுத்த வேண்டும் எனஅறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி நகர் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்களையும்,கால்வாய்களையும் மற்றும் சிறுபாலங்களையும் துார்வாரி துாய்மைப்படுத்த ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.6,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு:

பணியின் அசரஅவசிம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்519/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 62, நாள்: 22.07.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 11**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு.9, குருலிங்காபுரம் தெற்கு தெருவில் மின்விசை பம்பு பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலையில் உள்ளது. அதனை பழுது பார்க்கும் பணி செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.4,450/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் 432/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 63, நாள்: 22.07.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 12

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு.18, மன்னார்கோட்டை ரோடு, குரு தீப்பெட்டி ஆபிஸ் முன்புறம் உள்ள தண்ணீர் தொட்டியில் மின்மோட்டார் பழுதுடைந்துள்ளது. அதனை பழுது பார்க்கும் பணி செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.4,670/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் 436/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 64, நாள்: 22.07.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 13

சாத்துார் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள கணினி ஜெட் ராய்டு TN67 BE 5382 வாகனத்திற்கு புதிய பேட்டரி சப்ளை செய்ய **08.06.2022** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. கீழ்க்கண்டபடி இரண்டு நிறுவனத்தினர் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

1. முத்துலெட்சுமி எலக்ட்ரிகல் ஒர்க்ஸ் – ரூ. **6400.00**
2. நியூ ஜார்ஜ் ஆட்டோ எலக்ட்ரிகல்ஸ். – ரூ. **5800.00**

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நியூ ஜார்ஜ் ஆட்டோ எலக்ட்ரிகல்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 360/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 65, நாள்: 22.07.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 14

சாத்துார் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினி மற்றும் யூபிஸ் **2022–2023–**ம் ஆண்டுக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள **20.06.2022** அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. அதன்படி மூன்று நிறுவனத்தினர் கீழ்க்கண்டுள்ளபடி விலைப்புள்ளிகள் அளித்துள்ளனர்.

1. Star System Services, Sivakasi - Rs. 62400.00
2. Rathan Computers, Sivakasi - Rs. 64200.00
3. Genius Sales & Services, Sivakasi - Rs. 64500.00

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Star System Services, Sivakasi அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்..
(ந.க.எண். 1782/2021/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 66, நாள்: 22.07.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 15</u>**

சாத்தூர் நகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் சீவலப்பேரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறும் குடிநீர் பொதுமக்களின் தேவைக்கு போதுமானதாக இல்லை. தற்போது தங்களது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள விருதுநகர் மாவட்டம் 99 கிராமங்களுக்கான கூட்டுக்குடிநீர் திட்டம் தற்போது செயல்படாத நிலையில் உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக குடிநீர் விநியோகம் இத்திட்டத்திலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சாத்தூர் நகராட்சியின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு இத்திட்டம் சாத்தூர் நகராட்சிக்கு பயன்பெறும் வகையில் நீர்உறிஞ்சும் கிணறு தலைமை நீரேற்று நிலையம் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றை அவற்றில் உள்ள பைப்லைன் மற்றும் மின்மோட்டர்களுடன் சேர்த்து ஒப்படைப்பு செய்ய மேற்கண்ட திட்டத்தினை சாத்தூர் நகராட்சி மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

சாத்தூர் நகர் பொதுமக்களின் குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கட்டுப்பாட்டில் உள்ள நீர்உறிஞ்சும் கிணறு தலைமை நீரேற்று நிலையம் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றை அவற்றில் உள்ள பைப்லைன் மற்றும் மின்மோட்டர்களுடன் சேர்த்து ஒப்படைப்பு செய்யும் பட்சத்தில் நகராட்சியின் மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 528/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 67, நாள்: 22.07.2022**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) ச. குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**